## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை

## நேரம் வினா எண் 329.
## தலைப்பு: "மனசாட்சியா அல்லது விழிப்புணர்வா. எண்ணங்களா அல்லது உள்ளுணர்வா"

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 190-195 லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி ஆன்மீக உபதேசங்களில் கூறப்படுகின்ற சில சொற்கள் எங்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.உதாரணமாக மனசாட்சி மற்றும் விழிப்புணர்வு இரண்டும் ஒன்று போல் தோன்றுகிறதே.
இவைகளுக்கிடையே வித்தியாசம் ஏதும் உண்டா ஸ்வாமி.பண்டிதர்களின் விளக்கங்கள் மேலும் குழப்பத்தை தான் ஏற்படுத்துகின்றன.இவைகளின் அர்த்தங்களை தாங்கள் எங்களுக்கு கூறி அருள வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இவை இரண்டும் ஒரே மாதிரியாக தோன்றினாலும் வேறுபாடு இருக்கிறது.
இங்கே ஆழ்மனது,மனசாட்சி,விழிப்புணர்வு இவை மூன்றை பற்றியும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.
புலன்களின் கீழாக இருந்து புலன்களின் மூலமாக செயல்படுவது ஆழ்மனது.புலன்களுக்கு மேலாக இருந்து புலன்களால் பாதிக்கப்படாமல் செயல்படுவது மனசாட்சி .இந்த செயல்பாட்டில் கலந்து கொள்ளாமல் ஆனால் அனைத்தையும் அறிந்து எங்கும் பரவி இருப்பது விழிப்புணர்வு.
உதாரணமாக ஒரு பலூனில் நீங்கள் காற்றை நிரப்புகிறீர்கள்.அதனால் பலூன் விரிவடைகிறது.அந்த பலூனுக்குள் உள்ள காற்றே மனசாட்சியாகும்.மேலும் மேலும் காற்றை நிரப்பிக் கொண்டே போனால் பலூன் வெடித்து விடுகிறது.அப்போது உள்ளே இருந்த காற்று வெளியில் உள்ள காற்றுடன் கலந்து விடுகிறது.இதுவே எங்கும் பரவி நிற்கும் விழிப்புணர்வாகும்.
ஒவ்வொரு தனி மனிதனிடத்திலும் உள்ள இந்த மனசாட்சியே தெய்வீகமாகும்.இந்த தெய்வீக தன்மையானது பிரபஞ்சமெங்கும் பரவி நிற்கின்றது.ஆக அனைவரிடத்திலும் உள்ள மனசாட்சி பிரபஞ்சமெங்கும் பரவியிருப்பதே விழிப்புணர்வாகும்.
ஆன்மீக பாதை நுட்பமான பல விழயங்களை எடுத்து காட்டுகிறது.நீங்கள் தான் அதை ஜாக்கிரதையாக புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் அனைவருமே தங்கள் மீது மிகுந்த பக்தியும் அன்பும் கொண்டிருப்பதாக கூறிக் கொள்கிறோம்.

ஆனால் எங்கள் செயல்களிலும் வார்த்தைகளிலும் அகந்தையும் கர்வமும் உள்ளது.இதை எவ்வாறு சரி செய்ய வேண்டும் என எங்களுக்கு எடுத்து சொல்லுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
அகந்தை உள்ள மனிதனால் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ளவோ அனுபவிக்கவோ இயலாது.இது நிச்சயம்.எவ்வாறு தண்ணீர் எப்போதும் மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி பாய்கிறதோ அது போல அகந்தை கொண்ட மனிதனுக்கு வீழ்ச்சி தான் கிட்டும்.நீங்கள் கூறிக் கொள்ளலாம் கடவுளிடம் நான் அன்பு செலுத்துகிறேன் என்று.ஆனால் கடவுள் உங்கள் அன்பை ஏற்க வேண்டுமே.
உங்கள் நண்பருக்கு நீங்கள் ரிஜிஸ்டர் தபால் அனுப்பினால் அதை அவர் ஏற்றுக் கொண்டு கையொப்பமிட்ட வேண்டும் அல்லவா.
அது போலவே கடவுளும் உங்களின் பக்தியால் மகிழ்ச்சியும் நெகிழ்ச்சியும் அடைந்து பதிலளிக்க வேண்டும்.உங்களிடம் அகந்தை இருக்கும் வரை என்ன தான் நீங்கள் கடவுளிடம் பக்தி செலுத்தினாலும் அவர் ஒரு போதும் உங்களுக்கு பதிலளிக்க மாட்டார்.

இங்கே பாரதத்தில் வருகின்ற ஒரு நிகழ்வை பார்ப்போம்.
ஒரு நாள் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரும் அர்ஜுனனும் ஒரு இடத்திற்கு சென்று கொண்டிருந்த போது வழியில் ஒரு அந்தணர் கையில் வாளை ஏந்தி யாரையோ கொல்வதற்கு தயாராக இருப்பதை கண்டனர்.வியப்படைந்த இருவரும் அவரிடம் அந்தணராகிய நீங்கள் யாரை கொல்வதற்காக வாளை ஏந்தி நிற்கின்றீர்கள் என கேட்டனர். அவரும் நான் நான்கு பேரை கொல்வதற்காக தேடிக்கொண்டிருக்கிறேன் என்றார்.யார் அந்த நான்கு பேர் என ஸ்ரீ கிருஷ்ணர் கேட்டார்.
அந்தணர் சொன்னார் முதலாவதாக தேவரிஷி நாரதர் முனி.இவர் மூவுலகிலும் சுற்றி திரிந்து எப்போதும் ஸ்ரீ நாராயண மந்திரத்தை பாடி பாடி என் பிரபுவுக்கு ஓய்வில்லாமல் செய்து விடுகிறார்.
இரண்டாவது பிரகலாதன்.தந்தையால் கொடுமையான துன்பங்களுக்கு ஆளான போது இவர் ஹரி நாமத்தையே உச்சரித்து கொண்டிருந்ததால் மலை உச்சியிலிருந்து இவரை உருட்டி விடும் போது என் பிரபு காத்திருந்து இவரை தாங்க வேண்டியிருந்தது.கடலில் தூக்கி வீசப்பட்ட போது என் பிரபு கடலில் குதித்து இவரை காப்பாற்ற வேண்டியிருந்தது.நெருப்பில் இடப்பட்ட போது என் பிரபுவும் நெருப்பில் குதிக்க வேண்டியதாயிற்று.யானையின் கால்களுக்கு இடையே புகுந்து என் பிரபு இவரை காப்பாற்ற வேண்டியிருந்தது.எனவே என் பிரபு எப்போதும் இவரை காப்பாற்ற காத்திருக்கும்படியாயிற்று.இதனால் என் பிரபுவிற்கு ஓய்வில்லாமல்
போயிற்று.
மூன்றாவது தரௌபதி.இவர் என் பிரபுவே ஒரே கதி என்று தஞ்சமடைந்து கூப்பிட்டதால் தன் தேவியரிடம் கூட சொல்லி கொள்ள முடியாமல் என் பிரபு அவசரமாக செல்லும்படி ஆயிற்று.
கடைசியாக அர்ஜுனன்.அவன் என் பிரபுவை சாரதியாக வைத்துக் கொண்டு போர் களத்தில் பல்வேறு இன்னல்களுக்கும் தொல்லைகளுக்கும் அவரை ஆளாக்கினான்.எனவே அவனையும் கொல்ல வேண்டும் என்றார்.இதையெல்லாம்

கேட்டுக் கொண்டிருந்த அர்ஜுனன் அந்த அந்தணரின் இறை பக்தி தன்னை விட உயர்ந்தது என புரிந்து கொண்டு அவரை வணங்கினான்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி மனதில் தோன்றும் எண்ணங்களையும் உள்உணர்வையும் எவ்வாறு பிரித்தறிந்து தெளிவது ஸ்வாமி.
ஸ்வாமியின் பதில்:

எண்ணங்கள் மனதில் தோன்றுகின்றன.அவை இரட்டை தன்மை கொண்டவை.
உள்ளுணர்வு என்பது இரட்டை தன்மை இல்லாதது.உங்கள் விருப்பத்திற்கேற்ப எண்ணங்கள் தோன்றும்.ஆனால் உள்ளுணர்வு உங்கள் மனம் புத்தி இரண்டையும் சாராமல் தானாகவே தோன்றுகிறது.
அது சத்தியத்திலிருந்து
பெற படுகிறது.அதனால் உறுதியானதாக உள்ளது.அதுவே பகுத்தறிந்துணரும் ஆழ்நிலை உணர்வாகும்.
மனதில் தோன்றுகின்ற எண்ணம் சரியானதாகவும் இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம். ஆனால் உள்ளுணர்வென்பது சத்யமேயாகும்.
எண்ணங்கள் புலன்களின்பாற் பட்டது.உலகியலானது.ஆனால் உள்ளுணர்வோ மனசாட்சியின் குரலாகும்.
அதுவே தெய்வீகமாகும்.உங்களுடைய அறிவாற்றல் பல சமயங்களில் உங்களுக்கு நெருங்கியவர்களைகூட சந்தேகப்படச் செய்யும். ஆனால் மனசாட்சி அதாவது உள்ளுணர்வு உங்களை பரந்த விழிப்புணர்வு நிலைக்கு இட்டுச் செல்லும்.

அடுத்த கேள்வி: ஸ்வாமி நாங்கள் எங்கள் தினசரி வாழ்க்கையில் சமூக பொருளாதார தார்மீக விஞ்ஞான அரசியல் காரணங்களால் பாதிக்கப்படுகிறோம். சமுதாயத்தில் பிறர் சமத்துவம் சமநிலை பற்றியெல்லாம் பேசுவதை கேட்கிறோம்.
இதை நடைமுறையில் சாதிக்க முடியுமா.சிலர் அதை பெற்று தருவதற்காகவே தாங்கள் உழைப்பதாக கூறிகொள்கிறார்கள்.நாங்கள் அவர்களை எப்படி புரிந்து கொள்வது.

ஸ்வாமியின் பதில்:
ஒருவர் சத்யத்தை தேடுபவராக இருந்தால் தவறில்லை.நீங்கள் குறிப்பிட்ட சமத்துவம் சமநிலை இரண்டும் வேறு வேறான பொருளை தருபவை.
சமநிலை என்பது தனி மனிதர்களிடத்தில் அடையப்பட வேண்டியது.சமத்துவம் என்பதோ ஒட்டு மொத்த சமுதாயத்திலைம் கொண்டு வரப்பட வேண்டியதாகும்

ஒட்டு மொத்த சமுதாயத்திலும் சமத்துவம் கொண்டு வருவதென்பது எப்போதுமே சாத்தியமில்லாத ஒன்றாகும்.
மனித உடலே சமநிலையில் படைக்கப்பட வில்லையே.
மூக்கும் வயிறும் வெளிப்புறமாக வருவதாகவும் கழுத்து கீழ் நோக்கி செல்வதாகவும் படைக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் நேரான தூண் போலவா இருக்கிறார்கள்.
பூமி எப்படி இருக்கிறது.ஒரே சமதளமாகவா இருக்கிறது.

மேடும் பள்ளமும் மலையும் பள்ளத்தாக்கும் சமுத்ரமும் கொண்டதாகத்தானே இருக்கிறது.
மனிதர்கள் அனைவரும் ஒரே உயரம் எடை நிறம் கொண்டவர்களாக இருக்கிறார்களாஒவ்வொருவருடைய எண்ண ஓட்டமும் ஆசைகளும் குறிக்கோளும் ஒரே மாதிரியாகவா இருக்கிறது.
இல்லையே.பின் சமுதாய சமத்துவம் என்பது எப்படி வரும்.
சிறு உதாரணம்.
ஒருவரிடம் ஏழு ஏக்கர் நிலமும் மற்றொருவரிடம் ஐந்து ஏக்கர் நிலமும் இருக்கிறது.இந்த இரண்டையும் சேர்த்து ஆளுக்கு சரி பாதியாக பிரித்தால் முதலாமவர் ஒரு ஏக்கர் நிலத்தை இழப்பதால் வருத்தமடைவார்.இரண்டாமவர் ஒரு ஏக்கர் நிலத்தை பெறுவதால் மகிழ்ச்சி அடைவார்.
இருவருடைய உணர்வும் வேறாக ஆகிவிடுகின்றது.இதில் சமத்துவம் எங்கேயிருந்து பெறபடுகிறது.

ஒரு முறை
அரசர் ஒருவர் மாறுவேடத்தில் சென்ற போது சிலர் துன்பத்தில் வாடுவதை பார்த்து அவர்கள் துயர் போக்க எண்ணினார்.
காட்டிற்கு சென்று தனிமையில் கடவுளிடம் சமுதாய சமத்துவத்திற்காக பிரார்த்தித்தார்.கடவுளும் அரசர் முன் தோன்றி சமுதாயத்தில் சமத்துவத்தை கொண்டு வருவதற்காக அரசருக்கு நூறு வருட ஆயுளை கொடுத்தார்.
இதை கண்ட அரசியார் தானும் கடவுளிடம் பிரார்தித்து அரசருக்கு மட்டும் அல்ல ஜனங்களுக்கும் நூறு வருட ஆயுள் வேண்டும் என கேட்டார்.கடவுளும் அவ்வாறே அருளினார்.
அதை கண்ட சில சமுதாய பெரியவர்கள் தவம் செய்து கடவுளிடம் அரசிக்கும் நூறு ஆண்டு ஆயுள் தருமாரு கேட்க அது போன்றே கடவுளும் அருளினார்.சிறிது காலம் கழித்து அரசர் ராஜ்யத்திற்கு திரும்பினார்.தன்னுடைய அரண்மனையை மிகுந்த சிரமப்பட்டுதான் கண்டுபிடித்தார்.ஏனென்றால் எல்லா இடங்களும் சமத்துவத்துடன் அரண்மனையாகவே இருந்தன.
அரசர் தான் குளிப்பதற்கு தண்ணீர் தயார் செய்யும்படி சொல்ல அரசியோ வேலையாட்கள் யாருமே இல்லை.ஏனென்றால் சமுதாயம் சமத்துவம் அடைந்து விட்டது என்றார்.அரசரும் சமூக ஒழுங்கு மாறி போய் விட்டது கண்டு தன் தவறை உணர்ந்தார்.
அவர் உடனே கடவுளிடம் பழையபடி அனைத்தையும் மாற்றி விடமாறு வேண்டி கொண்டார்.

சமுதாயத்தில் சமத்துவம் கொண்டு வருவது என்பது இப்படித்தான் ஆகி விடும்.
ஆனால் சம நிலை என்பது வேறு.அது தனி மனிதர்களால் பெறப்படுவது.இன்பம் துன்பம் சுகம் துக்கம் அனைத்திலும் சம நிலையில் இருப்பதாகும்.
வெற்றி தோல்வி இரண்டையும் சமமாக பாவிக்கின்ற நிலையாகும்.
புகழ்ச்சி இகழ்ச்சி இரண்டிலும் மனம் சஞ்சலபடாமல் ஒரே நிலையில் இருப்பதாகும்.
கடவுள் ஒருவரே.அவர் எங்கும் இருக்கிறார் என்ற புரிதலாகும்.

பசி தாகம் போன்ற உணர்வுகள் அனைவருக்கும் ஒன்றே. ஆனால் விருப்பு வெறுப்புகள் சுவை மற்றும் ஆசைகள் வேறுபடத்தான் செய்கின்றன.
எனவே சமுதாயத்தில் சமத்துவம் என்பது ஒரு போதும் அடையப்பட முடியாதது. ஆனால் சமநிலை என்பது ஒவ்வொரு தனி மனிதனாலும் அடையப்பட வேண்டியதாகும்

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்